பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 16 வெள்ளிக்கிழமை 03.11.2023 கதிர் 356

## மலையகத் தமிழர் கல்வி வளர்ச்சிக்காக
# ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களை இந்தியா மலையகம் அனுப்பும்
### 'நாம் 200' நிகழ்வில் நிதி அமைச்சர் நிர்மலா அறிவிப்பு



வம்சாவளி தமிழ்சமூகத்தின்கல்வியை மேம்படுத்துவதற்காக இந்தியா ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களை அனுப்பி வைக்கும் என்று இந்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகார அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

மலையகசமூகம்இலங்கைக்குவந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் வகையில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட ☞ 2

மலையகத்தில் வாழும் இந்திய

## இது ரகசியம் அல்ல!

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு பாசிச அமைப்பு, தமிழ்ச் சமூகத்திற்குள் உருவாகிய புற்றுநோய் என்றெல்லாம்கடுமையாகவிமர்சித்த இளம் சட்டத்தரணியான சுவஸ்திகா அருள்லிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு நிகழ்வில் பேச அழைக்கப்பட்டிருந்த நிலையில் மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக அதனைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நடத்தத் தடைவிதிக்கப்பட்டது. அந்த விவரங்களைஇந்தப்பத்தியில்வாசகர்களுக்கு விரிவாகத் தந்திருந்தது ஞாபகமிருக்கும்.

விடுதலைப் புலிகள் ஒரு பாசிச அமைப்பு. தமிழ்ச் சமூகத்தினுள் உருவாகியுள்ள புற்றுநோய் விடுதலைப்புலிகள். போர் முடிகின்றபோது அரசியல் ரீதியாக அதை எவ்வாறு கையாள்வது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. முள்ளிவாய்க்கால் படுகொலையில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இறந்தமை இவர்களின் பிடிவாத அரசியலின் விளைவே. பல எதிரிகளைக் கொன்று, தமக்கு உடன்படாத பல தமிழர்களையும் கொன்று, சிறுவர்களைப் போருக்கு சேர்த்து, தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு வாய்ப்பளிக்காத கொடூர பாசிச அமைப்பு விடுதலைப் புலிகள் ☞ 2

## யாழ். வருகிறது சீன தூதரக குழு

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழு யாழ்ப்பாணத்துக்குவரும்திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இந்தப் பயணத்தின்போது வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆகியோருடன் உத்தியோக பூர்வ சந்திப்புகளை மேற்கொள்ளவிருக்கின்றனர் இந்தக் குழுவினர். சீன அரசின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நலனோம்புத் திட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடத்திட்டமிட்டிருப்பதாகச்சீனத் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், இலங்கைக்கான சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 50 பேருக்கு ☞ 2

## பல்கைலை விரிவுரையாளர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பு

பல்கலைக்கழகங்களின் வளப்பற்றாக்குறை, விரிவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகளைமுன்னிலைப் படுத்தி17 அரசபல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்கள் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டமையால் அரச பல்கலைக்கழகங்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

இதன் பிரதான போராட்டம், கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் இறுதியில், பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தின் தலைவர் பரண ஜயவர்தன குறிப்பிடுகையில்,

பொருளாதார மீட்சிக்காக ஆட்சியாளர்கள் எடுக்கும் ☞ 8

## பொருளாதார, தொழில்நுட்ப ஒப்பந்தம் குறித்து இந்தியா – இலங்கை மீள பேச்சு

2018ஆம்ஆண்டுமுதல் இடைநிறுத்தப்பட்டிருந்த பொருளாதார மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பான முன்னெடுப்புக்களை மீள ஆரம்பிக்கும் வகை யில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 12ஆவது சுற்றுப் பேச்சு, ஒக்டோபர் 30ஆம் திகதி முதல் நவம்பர் முதலாம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

நாட்டின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளைப் பாதுகாத்து ஊக்குவிப்பதன் மூலம் ஏற்றுமதி பல்வகைப் படுத்தலுக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியாவிலுள்ள மிகப்பெரிய பொருளாதாரங்களுடன் இணைவதே இலங்கை ஆளும் தரப்பின் நோக்கமாகும். இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் உலக பெறுமதிச் சங்கிலியின் ஊடாக பிரதான தரப்பினர்களுடன் இணைவதே தற்போதைய ஆளும் தரப்பின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பொருளாதாரக் கூட்டுறவானது வர்த்தகம் மற்றும் முதலீடு ஆகிய இரு நாடுகளினதும் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாகும். முன்னுரிமையான துறைகளில் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை விரிவாக மேம்படுத்தும் நோக்கத்துடன் 2018 முதல் ☞ 8

## மலையகத்தில் தோட்டக் கம்பனிகள் இனிமேல் இல்லாமல் செய்யப்படும்
### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

மலையகத்தில் கம்பனி நடைமுறைகள் இல்லாமல்செய்யப்படும். மலையக மக்களுக்குப் பத்து பேர்ச் காணி உறுதியுடன் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது உறுதியாகத் தெரிவித்தார். அத்துடன் கல்வித்துறையில் அனைவருக்கும் சமத்துவ வாய்ப்பை வழங்குவதற்கு இந்த ஆட்சி தீர்மானித்திருக்கிறது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கைக்கு இந்தியவம்சாவளி தமிழ் மக்கள் வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு நடைபெற்ற 'நாம்200' ஆண்டு விழா ☞ 2

## எமது அரசியலை முடக்கவே வழக்குகளைத் தொடுத்தனர்
### மைத்திரி – ரணில் ஆட்சி மீது நாமல் பாய்ச்சல்

எமது அரசியல் எதிர்காலத்தினை முடக்குவதற்காவே மைத்திரி - ரணில் ஆட்சி வழக்குகளை தாக்கல் செய்தது என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ தெரிவித்தார்.

கோவெர்ஸ் கோப்பரேட் (Gowers Corporate Services) நிறுவனம் மற்றுமொரு நிறுவனத்துடன் மேற்கொண்டகொடுக்கல் வாங்கலில், 300 இலட்சம் ☞ 8

## சீனிக்கான வரியை இரட்டிப்பாக்கியது அரசு

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் சீனிக்கான விசேட வர்த்தக வரி நேற்று நள்ளிரவு முதல் நடைமுறையாகும்வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சீனிக்கு 25 சதமாக காணப்பட்ட விசேட வர்த்தகப்பொருட்கள்வரி இன்று முதல் 50 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வரியானது அடுத்த ஒரு வருடத்திற்கு நடைமுறையாகும் வகையில், குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு மேலும் கூறியுள்ளது.

## கடினமாக இருந்தாலும் சரியான முடிவுகளையே எடுக்கின்றோம்
### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் நாடு தள்ளப்படுவதைத் தடுக்க, கடினமானதாக இருந்தாலும் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். யாசகம் செய்யும் நாட்டுக்குப் பதிலாக வலுவான பொருளாதாரத்தை கொண்ட நாடொன்றை கட்டியெழுப்புவது எந்த அளவு கடினமாக இருந்தாலும் அதற்கு அவசியமான தீர்மானங்களை தற்காலத்தில் உரிய வகையில் மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு தாமரைத் தடாக அரங்கத்தில் நேற்று நடைபெற்ற தொழிற்சாலைகளுக்கான, தேசிய கைத்தொழில் விருது விழா - 2023 இல் கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும்தெரிவித்ததாவது:

இன்று விருது பெற்றவர்களைப் பார்த்தபோது, கடந்த வருடம் நினைவுக்கு வந்தது. கடந்தவருடத்தில் இந்தத் தொழில்களை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்ற கேள்விக்குறி காணப்பட்டது. மின்சாரம் இல்லாமை மற்றும் வங்கிக் கடன் பெற முடியாத நிலை காரணமாக ஆயிரக் கணக்கான வியாபாரங்கள் கைவிடப்பட்டன.

இன்று எதிர்பாராத வகையில் பெருமளவானவர்கள் தங்கள் தொழில்களில் மீண்டும் ஈடுபட்டு வெற்றிகரமாக ☞ 2

## சுகாதாரம் மற்றும் கல்வித் துறைகளுக்கு ஒன்பது பில்லியன் வழங்க நடவடிக்கை
### 8400 நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் விசேட திட்டத்தின் ஊடாக ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைகளுக்கு ஒன்பது பில்லியன் வழங்கப் படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்தார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மாகாண சபைகளுக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8400 பணியாளர்கள் நிரந்தர அரச சேவையில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'GIS' மற்றும் 'GPS Maping' ஆகியவை ஊடாக அனைத்து உள்ளூராட்சி சபை வீதிகளும் பட்டியிலிடப் பட்டு ஒழுங்கமைக்கப் படும்.

வடமேற்கு மாகாணத்தில் அதனை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அந்த முறையில் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்க அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இயக்கம் என்று சுவஸ்திகா தெரிவித்திருந்தார். அது தனது தனிப்பட்ட கருத்து என்றும் கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் அவர் தெரிவித்திருந்தார். இதனால் கோபமடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு அவரது நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமுற்பட்டது. அதன்பின்னர் மாணவர்களுடன் பேசிய கலைப் பீடாதிபதி, நிகழ்வு நிறுத்தப்படுகின்றது என்று அறிவித்தார்.

இந்தப் பிரச்சினையை அப்படியே விட்டுவிடுவதற்கு சுவஸ்திகா தயாரில்லை என்கிற விடயத்தையும் முன்னரே சுட்டிக்காட்டியிருந்தேன். அதேபோன்றே நேற்று அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தின் முக்கிய விவரங்கள் வருமாறு:

சமகால பிரச்சினைகளுக்கான சட்ட மன்றத்தின் ஒரு பகுதியாக 2023 ஒக்டோபர் 31 திட்டமிடப்பட்டிருந்த 'நெருக்கடியான காலங்களில் நீதித்துறைசுதந்திரம்' என்ற விரிவுரை இரத்து செய்யப்பட்டது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு எழுதப்படும் கடிதம்.

இந்த விரிவுரை திடீரென ரத்து செய்யப்பட்டது தொடர்பாக எழுப்பப்படும் ஊடகக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த பொதுக் கடிதத்தை எழுதுகிறேன்.

யாழ். பல்கலைக்கழகத்திற்குள் கருத்துச் சுதந்திரம் தொடர்பாக ஏற்பட்ட ஒரு பாரதூரமான பிரச்சினையை எழுப்பவே நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்த பொதுக் கடிதத்தை உரிய முறையில் பரிசீலிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

31 ஒக்டோபர் 2023 அன்று 'நெருக்கடியான காலத்தில் நீதித்துறை சுதந்திரம்' என்ற தலைப்பில் சட்டத்துறைத் தலைவரால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் பேச அழைக்கப்பட்டேன். மூன்று காரணங்களுக்காக நான் உடனடியாக ஒப்புக்கொண்டேன். முதலாவதாக, நான் ஒரு சட்டத்தரணியாக இருப்பதோடு தொடர்ந்து நீதிமன்றங்களோடு ஈடுபாட்டில் இருக்கிறேன். இரண்டாவதாக, இந்த நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களை சந்திப்பதற்கும், கருத்துக்கள், கோட்பாடுகள் பற்றியும் அவை நடைமுறையில் எவ்வாறு வெளிவருகின்றன என்பதைப் பற்றியும் கலந்துரையாடுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் என்று நான் எண்ணினேன். மூன்றாவது அண்மை காலத்தில் சிங்கள தேசியவாதிகளிடம் இருந்து இனரீதியான அச்சுறுத்தல்களின் பிரகாரம் பதவி விலகிய முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு சரவணராஜவின் பதவி விலகலுக்குக் காரணமாக இருந்த இனரீதியான தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்திலும் நான் ஈடுபட்டிருந்தேன்.

ஒக்டோபர் 30, எனது விரிவுரைக்கு ஒரு நாள் முன்னதாக, நான் பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றப் போவது தொடர்பில் மாணவர் சங்கம் அதிருப்தியை தெரிவித்திருந்தனர் என்று சட்டத்துறைத் தலைவர் என்னிடம் தெரிவித்தார். கடந்த மாதம் நான் ஆற்றிய மற்றுமொரு உரையில் விடுதலைப் புலிகளை ஒரு பாசிச அமைப்பாகக் கட்டமைத்திருந்தேன் என்பதுதான் இந்த அதிருப்திக்கான காரணம் என்றுகூறினார். எப்படியிருந்தாலும், விரிவுரை திட்டமிடப்பட்டவாறே இடம்பெறும் என்று அவர் என்னிடம் கூறினார்.

விரிவுரை நடைபெறும் நாளில், பேசுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக, நான் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் இனி நிகழ்வை நடத்துவது சாத்தியமில்லை என்று சட்டத்துறைத் தலைவர் எனக்குத் தெரிவித்தார். எனவே பல்கலைக்கழகத்திற்கு வெளியே நிகழ்வை நடத்த கலைப் பீடத்தின் பீடாதிபதி அழைப்பு விடுத்தார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இடத்தை மாற்றுவதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று துறைத் தலைவரிடம் தெரிவித்தேன். நான் பல்கலைக்கழகத்திற்கு வந்ததும், பீடாதிபதியைச் சந்திக்க விரும்புகின்றேன் எனவும் நான் கேட்டுக் கொண்டேன்.

பீடாதிபதியை சந்தித்த போது பதில் துணைவேந்தரும் தானும் இந்த நிகழ்வை 'ஒத்திவைக்க' முடிவு செய்திருக்கின்றோம் என்றும் 'அசௌகரியத்தை (unpleasant)' தவிர்க்கவிரும்பியதால் அவர்களால் இந் நிகழ்வை நடத்த முடியாது என்றும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களிடம் பேசினார் எனவும், எதிர்ப்பை வெளிப்படுத்த மாற்று வழிகளை அவர்களுக்கு பரிந்துரைத்தார் எனவும் பீடாதிபதி என்னிடம் தெரிவித்தார். எனினும் இந்த நிகழ்வு தொடரக் கூடாது என்பதில் மாணவர்கள் விடாப்பிடியாக இருந்தனர் என்றும் மாணவர்கள் 'தீவிர உணர்வுகளுடன் (extreme emotions)' செயல்படுகின்றனர் எனவும், அவர்கள் 'முதிர்ச்சியற்ற' (immature) முறையில் நடந்துகொள்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

நானும் 'அதீத உணர்ச்சிகளின்' கீழ் அறிக்கைகளை வெளியிட்டேன் என்றும், எனது முந்தைய உரையில் விடுதலைப் புலிகளை அந்த வகையில் நான் பரந்த அளவில் வர்ணித்திருக்கக்கூடாது என்றும் அவர்கூறினார். என்னுடன் தனக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும் என்னை அழைக்க தான் முடிவு செய்தார் என்றும் அவர் கூறினார்.

பதிலுக்கு, ஒரு நிகழ்வைக்கூட நடத்த முடியாத நிலையில், நான் "தீவிர உணர்ச்சிகளுடன்" பேசினேன் என எனக்கு விரிவுரை செய்யக்கூடிய ஒரு இடத்தில் அவர் இல்லை என்று நான் பீடாதிபதியிடம் கூறினேன். இந்த நிகழ்வை இரத்துச்செய்ததன் மூலம் பல்கலைகழக நிர்வாகம் புலிகளின் கருத்துக்கு மாறான கருத்துக்களை பல்கலைகழகத்திற்குள் அனுமதிக்காது என்ற செய்தியை எனக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அனுப்பியுள்ளதாக நான் மேலும் கூறினேன்.

பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்கு சட்டத்துறை என்னை அழைத்தது ஒரு முரண்நகை என்று நான் மேலும் கூறினேன். நிகழ்வைத் தொடருமாறு நான் பீடாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை விடுத்தேன். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

எனது விரிவுரையை இரத்துச் செய்யும் முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்ததன் மூலம், பல்கலைக்கழகத்திற்குள் சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு எதிராக ஓர் ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது.

பரந்தளவில், மாணவர் அமைப்பு மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகம், ஜனநாயக வெளியின் மீதான இந்த அப்பட்டமான பாதிப்புக்கு எதிராக ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்றும், இவ்வாறானதொருசம்பவம் மீண்டும் நடப்பதை அனுமதிக்கமாட்டார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

எனது பங்கிற்கு, பீடாதிபதி உறுதியளித்த அதே விரிவுரைத் தொடருக்கான 'ஒத்திவைக்கப்பட்ட' அழைப்பிற்காக நான் காத்திருக்கிறேன். இந்த விடயத்தில் தாங்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் எனது கருத்தைப் பேசுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இடமளிப்பீர்கள் எனவும், வெவ்வேறு கருத்து நிலைப்பாடுகளை உடையவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எந்தத் தடையும் இல்லாமல் உரையாடல்களிலும், விவாதங்களிலும் ஈடுபடுவதற்கான கலாசாரம் ஒன்று நிலவுவதனை உறுதி செய்வீர்கள் எனவும் நம்புகின்றேன்.

இப்படி அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். ஏற்கனவே பல்கலைக்கழகத்திற்குள் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கட்டியது தொடர்பில் துணைவேந்தருக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு மீது விசாரணைகள் நடந்து வரும் நிலையில் - அத்தகைய இக்கட்டுக்குள் துணைவேந்தர் சிக்கிக் கொண்டுள்ள நிலையில் - சுவஸ்திகா விடயத்தில் தீர்க்கமான ஒரு நடவடிக்கையை எடுக்கக்கூடியவராகத் துணைவேந்தர் இருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்படிச் செய்தால், அவர் இரு தலைக் கொள்ளி எறும்பாக மாறும் சூழல் ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாகி விடும். அதாவது ஒருபுறம் முள்ளிவாய்க்கால் தூபிக்காக அதிகார வர்க்கத்தால் அவர் இலக்கு வைக்கப்பட, மறுபுறம் புலிகளைப் பாசிசவாதிகள் என்றவரை பேச அனுதித்தார் மாணவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பேர்வழிகளாலும் இலக்கு வைக்கப்படுவார்.

அதனால், இத்தகைய நிலைகளில் தமிழ் அதிகாரிகள் வழக்கமாகக் கையாளும் உத்தியான கடந்துபோதல் மட்டுமே நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் இதில் அதிகம் உள்ளன. சுவஸ்திகா எதிர்பார்ப்பதைப்போல அவருக்கு மீள்அழைப்புக்கிடைப்பதுதுர்பலமே! அதுதான் இங்குள்ள டிசைன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட 'நாம் 200' நிகழ்வில் உரையாற்றிய சீதாராமன், கல்வியை மேம்படுத்த இந்திய அரசி தொடர்ச்சியான மற்றும் அசைக்க முடியாத ஆதரவு தொடர்ந்து கிடைக்கும் என்று உறுதியளித்தார்.

எந்தவொரு சக்தியாலும் அழிக்க முடியாத ஒரே செல்வம் கல்வி மட்டுமே என இந்திய அரசு நம்புவதால், அதன் அபிவிருத்திக்காக இலங்கையில் உள்ள மலையக சமூகத்திற்கு ஆதரவு வழங்குவதில் இந்திய ஆட்சியாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்துகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார். இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளை மற்றும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் (வீரவீஎீ) மேம்பாட்டுக்காக இந்திய அரசு நிதியுதவிகளை அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

'மலையகச்சமூகத்திற்கானஎங்கள் உதவித் தொகுப்பின் ஒரு பகுதியாக, சமீபத்திய கற்பித்தல் போக்குகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து மலையகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு உதவுவதற்காக ஆசிரியர் பயிற்சியாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மேம்படுத்தப்பட்ட தொண்டமான் தொழிற்பயிற்சி மையம் மலையகத்தில் திறமையான சமூகத்தை உருவாக்கும் என்று நான் நம்புகின்றேன் - என்றார் அமைச்சர் நிர்மலா.

இதேவேளை, இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களுக்காக மேலும் 10,000 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இந்திய அரசு அறிவித்துள்ளது.

'நாம் 200' நிகழ்வில் கலந்து கொள்வதற்கு முன்னதாக நேற்றுக் காலையில் திருகோணமலைக்குப் பயணமானார் அமைச்சர் நிர்மலா, கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின் அழைப்பின் பேரில் இந்தப் பயணம் இடம்பெற்றது.

திருகோணமலை விமான தளத்தில் நிர்மலா சீதாராமனை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதம செயலாளர் ரத்நாயக்க, ஆளுநர் செயலாளர் மதநாயக்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் அணில் விஜயஸ்ரீ, அரச அதிபர் மற்றும் சுற்றுலா பணியகதவிசாளர் மதன் ஆகியோர் வரவேற்றனர்.

மேலும் ஆளுநரின் ஏற்பாட் டில் நிர்மலா சீதாராமன் திருக்கோணேச்சரம் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார். மேலும் பல முக்கிய நிகழ்வுகளிலும் பங்கேற்றார். பின்னர் 'ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா'வின் திருகோணமலைக் கிளையை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். நிகழ்வில் கிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே உட்பட பல அதிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதனைத்தொடர்ந்து நிர்மலா சீதாராமன் மற்றும் அவரது குழுவினர் இந்திய எண்ணெய் நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கூட்டம் ஒன்றிலும்

## யாழ். வருகிறது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்தம் ரூபா 6,500 படி வழங்குவதற்குத்திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சீனத் தூதுவரின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது அவர் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

## சுகாதாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. 36 ஆண்டுகளில் செய்யத்தவறிய பணியை ஒன்றரை ஆண்டுகளில் மேற்கொண்டு வருகிறோம்.

மேலும், வட மத்திய மற்றும் வட மாகாணங்கள் தற்போது வீதிகளை அடையாளம் கண்டு, பட்டியலிடும் பணி முடித்துள்ளன. 31.12.2023க்கு முன்னர் அந்த இரண்டு மாகாணங்களிலும் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எஞ்சிய 6 மாகாணங்களுக்கான காலவரையறையைத் தயாரித்துப் பயிற்சிகளை வழங்கி 2024ஆம் ஆண்டில் இலக்கை அடைய எதிர்பார்க்கப்படுகிறது.

எமது அமைச்சின் கீழ் உலக வங்கியின் ஆதரவின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் மூலம் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய சுகாதார மற்றும் கல்வித் துறைக்கு ஒன்பது பில்லியன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். சுகாதாரதுறைக்கு 4,500 மில்லியன் வழங்கப்படும். அடுத்த ஆண்டு ஜூன் மாத இறுதிக்குள் அந்தந்த மாகாணங்களின் சுகாதாரப் பிரச்சினைகளைத்தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

அந்த மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மேலும் 4,500 மில்லியனை வழங்குவதற்கும் நடவடிக்கைஎடுத்து வருகிறோம். ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் 6 மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் மாகாண சபைகளுக்கு உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் நிரந்தரமற்ற 8,400 ஊழியர்களை நிரந்தரமாக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் அவர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அவர்கள் சுமார் 15 வருடங்களாக சேவையில் இருப்பவர்கள். மாகாண சபைகளில் 10,000 பணியாளர்களின் வெற்றிடங்கள் இருந்தன.

மேலும், ஒன்லைன் முறையில் கொடுப்பனவுகளை செலுத்துதல், அபராதம் செலுத்துதல், இடமாற்றம் செய்தல் தொடர்பாக அடுத்த 02 வாரங்களில் மென்பொருள் தயாரித்தல் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் முதல் கட்டத்தின் கீழ், மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணத்தில் ஒன்லைன் முறை மூலம் பணம் செலுத்துவது 30.11.2023 ஆம் திகதிக்குள் தொடங்கப்பட உள்ளது என்றார்.

## மலையகத்தில்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுவதாவது:

இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பெரும் பணியாற்றிய மலையக தமிழ் மக்களுக்கு வேறுபாடுகளை காண்பிக்காமல் அவர்களை இலங்கைசமூகத்துடன் ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

எந்தவொரு இனக்குழுவாக இருப்பினும் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் அவர்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே ஆட்சியின் கொள்கையாகும் என்றும், அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதே நோக்கமாகும்.

இலங்கையில் நிதி உறுதித்தன்மையை ஏற்படுத்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் பெற்றுக்கொடுத்த உதவிகளை நினைவுகூர்வதோடு அந்த உதவி கிடைத்திருக்காவிட்டால் இன்றைய நிகழ்வைக்கூட சாதகமாக நடத்தியிருக்க முடியாது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## கடினமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முனனோக்கிச் செல்கிறார்கள். சிறு மற்றும் மத்தியதர தொழிற்சாலைகள் பலவும் குறுகிய காலத்தில் மீண்டும் வளர்ச்சியடைந்துள்ளன. இருப்பினும் சில பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. வங்கிக் கடன், சந்தை வாய்ப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அடுத்த வரவு செலவு திட்டத்தில், சிறு மற்றும் மத்திய தர கைத்தொழிலாளர்களுக்கான வங்கிக் கடன் சலுகை தொடர்பில் அறிவிக்க எதிர்பார்த்திருப்பதோடு, அந்த செயற்பாடுகளை படிப்படியாக முன்னெடுத்துச்செல்லஇருக்கிறோம்.

சரிவடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தை நாம் வகுத்துள்ளோம். அது குறித்து சர்வதேச நாணய நிதியத்துடனும் கடன் வழங்குநர்களுடனும் பேச்சுக்களையும் நடத்தியுள்ளோம்.

பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் இயலுமை நம்மிடம் இருக்கிறதா என்பது தொடர்பிலேயே அனைத்து சந்தர்ப்பங்களிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்காக எமது வருடாந்த வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ளவேண்டும். கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியும் என்ற நம்பிக்கையை அனைத்துத்தனியார் கடன் வழங்குநர்கள் மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்கள் மத்தியில் ஏற்படுத்தவேண்டும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் சரிவடையும்.

கடன் மற்றும் வட்டியைச் செலுத்துவதற்கான ஒதுக்கீடுகளை அடுத்த வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவிருக்கிறோம். கடனைச் செலுத்தாதிருந்தால் நாம் மீண்டும் பழைய நிலைக்குச் செல்வோம். எமது ரூபாயின் தரத்தையும் பேணிக்கொண்டு கடன்களைச் செலுத்தவேண்டும்.

கடந்த காலங்களில் வரவு செலவு திட்டத்திற்கு தேவையான நிதி இல்லாதபோது மத்திய வங்கியில் பணம் அச்சிடப்பட்டது. ஆனால் இப்போது அதை செய்ய முடியாதென சட்டரீதியாகவே தடைபோடப்பட்டுள்ளது. வங்கிக் கடன்களையும் பெற முடியாது. கடந்த காலங்களின் காணப்பட்ட முறையற்ற நிதிச் செயற்பாடுகளே அதற்கு காரணமாகும். அடுத்த வருடத்தில் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவேண்டும். அதற்குரிய இலக்குகளை நோக்கி பயணிக்கவேண்டும்.

அடுத்த வருடத்திலும் நாடு வங்குரோத்தடையாமல் முன்னோக்கிச் செல்ல வேண்டுமெனில் நாம் வருமானத்தை தேட வேண்டும். அதற்காகவே 'வற்' வரி 18% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அப்படிச் செய்யாவிட்டால் இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இருந்த நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். இது எந்தவொரு ஆளும் தரப்புக்கும் கடினமான நிலைமையாகும்.

எமது ஆட்சிக்கும் தேர்தல் நெருங்கி வரும் தருவாயிலிருக்கும் நாடாளுமன்றத்திற்கும் இது மிகக் கட்டினமானதாகும். இருப்பினும் அதனை செய்யாவிட்டால்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

# ‘ஒரே கிராமம் ஒரே நாடு’ கலந்துரையாடல் வவுனியாவில் பிரதமர் தலைமையில் நடந்தது





பிரதமர்தினேஷ்குணவர்தனதலைமையில் 'ஒரே கிராமம் ஒரே நாடு' கலந்துரையாடல் வவுனியாவில் இடம்பெற்றது.

'ஒரே கிராமம் ஒரே நாடு' என்ற கருத்தின் கீழ் மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான 17 ஆவது கலந்துரையாடல் புதன்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் வவுனியாமாவட்டசெயலகத்தில்இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள், வடமாகாண சபை செயலாளர்கள் மற்றும் அரசநிறுவனங்களின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட விவசாயத் திட்டங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

வடமாகாண பாடசாலைகளின் உயர்தர மற்றும் சாதாரணதரப் பரீட்சையில் தோற்றி சித்தியடையாதமாணவர்களின்முழுமையான அறிக்கையை தமக்கு வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன இங்கு தெரிவித்தார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முடிந்தவரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த பிரதமர், வவுனியாமாவட்டத்தின்அபிவிருத்திதொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் பிரதமர் வவுனியா நகரசபைக்குச் சென்று புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இலகுவாக இணையவழி வரி செலுத்தும் பணியினை ஆரம்பித்து வைத்தார்.

(05)

## புதிய டிஜிற்றல் சாரதி அனுமதி பத்திரம் கியூஆர் குறியீட்டுடன்

தற்போது பயன்பாட்டிலுள்ள செமிகண்டக்டர்சிப்களுக்குப்பதிலாக கியூஆர் குறியீடுகளுடன் டிஜிற்றல் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் கியூஆர் குறியீடுகளை வாசிக்க தனி தொலைபேசி அப்கள் பயன்படுத்தப்படும் எனவும் இதனை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைந்து பொலிஸாரும்முன்னெடுப்பர்எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து சிப் ரீடிங் யூனிட்களை இறக்குமதி செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

டிஜிற்றல் அல்லது ஸ்மார்ட் சாரதி அனுமதி பத்திரங்களை அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு கடந்த ஒக்ரோபர் மாதம் அமைச்சரவைஅனுமதிகிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

## பொலிஸில் முறைப்பாடு செய்வதாக அச்சுறுத்தியதில் சிறுமி தவறான

பொலிஸில்முறைப்பாடு செய்வதாக கூறியமையால் சிறுமி ஒருவர் தற்கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கு மேலும் மூன்று இளம் சகோதரர்கள் உள்ள நிலையில் இவர்கள் அயல் வீட்டு சிறுவர்களுடன் விளையாடுவது வழக்கம்.

ஒரு நாள் சிறுவர்கள் வழக்கம் போல் விளையாடிக்கொண்டிருக்கும் போது சிறுவர்களிடையே மோதல் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து இரு வீட்டாருக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டு இரு வீடுகளுக்கும் இடையில் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் தாக்கப்பட்ட அயல் வீட்டு சிறுமியின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப் போவதாக சிறுமியின் தந்தையிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில், பொலிஸ் முறைப்பாடு குறித்த அச்சத்தில் சிறுமி கடிதம் ஒன்றினூடாக தனது மரணத்திற்கு அயல்வீட்டார் தான் காரணம் என எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். *(05)*

## மகனுடன் வைத்தியசாலைக்கு சென்ற தாய் காட்டு யானை தாக்கியதில் சாவு

தனதுமகனுடன்சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருந்த தாய் ஒருவர் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார் எனத் திறப்பனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திறப்பனை, நிரவிய பகுதியைச் சேர்ந்த லலிதா குமாரி சந்திரலதா என்ற 50 வயதுடைய நபர் ஆவார்.

இவர் தனது 31 வயது மகனுடன் மோட்டார் சைக்கிளில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்குசிகிச்சைக்காக சென்று கொண்டிருந்த போது வீதியில் காணப்பட்ட காட்டு யானையால் தாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் இவர் காயமடைந்த நிலையில்அனுராதபுரம்போதனா வைத்தியசாலைக்குசிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மகனுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.இந்தசம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை திறப்பனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## கோப்பாயில் வழிபாட்டுக்குச் செல்லும் பெண்களை இலக்குவைத்து வழிப்பறி

### ஒருவர் கைது



யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கௌரிகாப்பு விரத வழிபாட்டுக்கு செல்லும் பெண்களை இலக்கு வைத்து , வழிப்பறி மற்றும் சங்கிலி அறுப்பு போன்ற கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பகுதியில் உள்ள ஆலயத்திற்கு செல்லும் பெண்களிடம் ஆள்நடமாட்டம் குறைந்த நேரத்தை பயன்படுத்தி, வழிப்பறியில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வந்துள்ளது.

குறித்த கும்பலால் சங்கிலி உள்ளிட்ட நகைகள், பெறுமதியான கையடக்க தொலைபேசிகள், கைப்பைகள், அவற்றில்இருந்தவங்கி அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்கள் மற்றும் பெரும் தொகையான பணம் என்பவை வழிப்பறி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்த நிலையில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் கொட்டடியைச் சேர்ந்த இளைஞனை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த போது கொள்ளையடிக்கப்பட்ட 10 பவுண் சங்கிலி, சில கைப்பைகள், சில அலைபேசி மற்றும் வழிப்பறிக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றுஎன்பனகைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05)

## ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரி அதிபராக எஸ்.ராஜன் நியமிப்பு



ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக நோர்வூட்தமிழ்மகாவித்தியாலய அதிபராக கடமையாற்றிய சித்திரன் ராஜன் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக கடமைகளைப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

புசல்லாவையை பிறப்பிடமாகக்கொண்ட இவர் பொகவந்தலாவை கெம்பியன் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியையும் சென் மேரிஸ் கல்லூரி மற்றும் ஹொலி ரோசரி ஆகிய கல்லூரிகளில் இடை நிலை மற்றும் உயர்தர கல்வியைத்தொடர்ந்தார்.

கொழும்பு பல்கலைக்கழக வணிகமாணி பட்டதாரியான இவர், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விமுது மாணி பட்டத்தையும்பேராதனை பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்துறைபட்டத்தையும் பெற்றுக்கொண்டவர்.

கொத்மலை எல்பட தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர், மஸ்கெலியா சென் ஜோசப் கல்லூரியிலும்பணியாற்றிபின்னர் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் பிரதி அதிபராக ஏழு வருடங்கள் கடமையாற்றினார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐ கொண்ட எஸ்.ராஜன் 130 வருட வரலாறு கொண்ட ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் 19 ஆவது அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேவையான உதவி

இந்தியாவில் இருந்து தமிழர்கள் தோட்டத் தொழிலாளர்களாக இலங்கைக்கு வந்ததன் 200 ஆண்டுகள் நிறைவை மலையகத் தமிழர்கள் கடந்து வருகையில் அவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக இந்தியா உதவிகளை வழங்கும் என்கிற அறிவிப்பை அந்நாட்டு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விடுத்துள்ளார். அமைச்சர் ஜீவன் தொண்டமானின் அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நாம் 200' நிகழ்வில் கலந்துகொண்டு அவர் இந்த அறிவிப்பைச் செய்தார்.


எந்தவொரு சக்தியாலும் அழிக்க முடியாத ஒரே செல்வம் கல்வி மட்டுமே என இந்திய அரசு நம்புவதால், அதன் அபிவிருத்திக்காக இலங்கையில் உள்ள மலையக சமூகத்திற்கு ஆதரவு வழங்குவதில் இந்திய ஆட்சியாளர்கள் சிறப்புக் கவனம் செலுத்துகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார். இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளை மற்றும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் (வீாவீளீ) மேம்பாட்–டுக்காக இந்திய அரசு நிதியுதவிகளை அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

'மலையகச் சமூகத்திற்கான எங்கள் உதவித் தொகுப்பின் ஒரு பகுதியாக, சமீபத்திய கற்பித்தல் போக்குகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து மலையகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு உதவுவதற்காக ஆசிரியர் பயிற்சியாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என்பதை அறிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மேம்படுத்தப்பட்ட தொண்டமான் தொழிற்பயிற்சி மையம் மலையகத்தில் திறமையான சமூகத்தை உருவாக்கும் என்று நான் நம்புகின்றேன் என்றார் அமைச்சர் நிர்மலா.

200 ஆண்டுகளாக கொத்தடிமைகளுக்கு நிகராக தோட்டங்களில் அடக்குமுறைக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குக் கல்வியைத்தவிர வேறு எதுவும் உதவப்போவதில்லை. அவர்களைக் கல்வி ரீதியாக வளப்படுத்துவதே அவர்களின் சுய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். எனவேதான் மலையகத்தின் கல்வி அபிவிருத்திக்கு உதவும்படி மலையகத் தலைவர்கள் தொடர்ந்து இந்தியாவிடம் வலியுறுத்திவந்துள்ளனர். இந்தியாவில் இருந்து ஆசிரியர்களைத் தரும்படிகூட அவர்கள் கோரியிருந்தனர். எனினும் ஆசிரியர்களை நேரடியாகப் பணிக்கு அனுப்புவது சாத்தியப்பாடானது அல்ல என்பதால், மலையக ஆசிரியர்களை மேலும் வளம்படுத்தி அவர்கள் ஊடாக கல்வி வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், பயிற்றுவிப்பாளர்களைத் தர இந்தியா முன்வந்திருக்கிறது.

இது மிகவும் வரவேற்கத்தக்க பாராட்டப்படவேண்டிய விடயம். மலையகத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்காக ஏற்கனவே நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டத்திற்கும் இந்தியா உதவி வருகின்றது. மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் மலையக இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிக்கும் உதவுவது குறித்து இந்தியா அறிவித்திருப்பது அந்த மக்களுக்குப் பெரும் பயனுள்ளதாக அமையும்.

200 வருடங்களாக மலையகத் தமிழர்கள் இழந்துவிட்ட வளர்ச்சியை மிக வேகமாக எட்டிப்பிடிக்கவேண்டியவர்களாக மலையக மக்கள் இருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு கல்வியே கைகொடுக்கும். எனவே அவர்களின் கல்விக்கான எந்தவகையான உதவிகளாயினும் அவை அறிவிப்புக்களோடு நின்றுவிடாமல் மிக விரைவாக அவர்களுக்குக் கிட்டவேண்டும்.



# ஓநாயும் கடாவும்

என்.சத்தியமூர்த்தி



மிஸ்கின் என்ற புனைப்பெயரால் அறியப்படும் தமிழ் திரைப்பட இயக்குநர், எழுத்தாளர் மற்றும் நடிகர் சண்முகராஜாவின் 2014ம் ஆண்டு வெளியீடு 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்'. ருஷ்ய எழுத்தாளர் டொஸ்டோவெஸ்கியின் 'தி இடியட்' என்ற நாவலின் கதாநாயகனின் பெயரையே அவர் தனது புனைபெயராக்கிக் கொண்டார் என்பது கொசுறு தகவல். ஆனால், இன்று தமிழ் அரசியல் பரப்பில் அடிபடும் இரண்டு மிருகங்கள், ஓநாயும், குட்டி வளர்ந்து பெரிதான ஆட்டு கிடாவும்.

அதுவும் சமகால தமிழ் சமூகத்தின் பெருந்தலைவர் சம்மந்தனை சம்மந்தப்படுத்தி அந்த ஒப்பீடுகள் முன்வைக்கப்பட்டது வருந்தத்தக்க விடயம்.

உண்மையைச்சொல்லவேண்டுமென்றால், இரண்டில் ஓநாய் மட்டுமே சம்மந்தனுடன் ஒப்பிட்டு பேசப்பட்ட மிருகம். அது சிங்கம், புலி போன்ற மிருகங்களுடன் கொடூரத்திற்கு ஒப்பிட்டு பேசப்படுவது. ஆனால். கடா அவற்றைப் போலவே வீரத்திற்கும் வேகத்திற்கும் பெருமை பேசப்படும் மிருகமல்ல.

தரம் தாழ்ந்த பேச்சு

சம்மந்தனை ஓநாயுடன் ஒப்பிட்டு பேசியது வேறு யாரும் அல்லர். அவரது சமகாலத் தலைவரான ஆனந்தசங்கரிதான் அவ்வாறு கூறினார். நீண்டகாலம் அரசியல் அறிக்கைகள் எதனையும் வெளியிடாத சங்கரி, எடுத்தோம், கவிழ்த்தோம் என்று கருத்து கூறியது கண்டனத்திற்குரியதோ இல்லையோ, நிச்சயம் கவலைப்பட வேண்டிய விடயம்.

சங்கரியை போன்ற ஒரு மூத்த தலைவர் இந்த அளவிற்கு பொது வெளியில் தரம் தாழ்ந்து பேசியது அடுத்த தலைமுறையினருக்குத் தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். தனக்கு உரித்தான தமிழ் அரசியல் தலைமையை சம்மந்தன் தட்டிபறித்துக் கொண்டார் என்பது சங்கரியின் ஆதங்கம். ஆனால், 'அரசியலில் இதுவெல்லாம் சாதாரணமப்பா' என்ற கவுண்டமணியின் அரிச்சுவடியை அவர் இன்னமும்கூட கற்கவில்லை என்பது, ஏன் அவர் தமிழர் தலைவராகவில்லை என்பதையும் நிரூபிக்கிறது.

அதற்காக இப்படியெல்லாமா சம்மந்தனை நோகடிப்பது? பழசையெல்லாம் மறந்துவிட்டு, இனப்போர் முடிந்த பின்னர் 2010 நாடாளுமன்றத் தேர்தலில், சம்மந்தன் அவருக்கு அளித்த மரியாதையை சங்கரி எவ்வாறு மறந்தார்? அன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவிற்கு முன்னரே, சம்மந்தன் சங்கரிக்கு அழைப்பு எடுத்து, அவருக்காக ஓர் ஆசனம் அளிப்பதாக உறுதி அளித்தாரே!

அது நிறைவேறாமல் போனாதற்குக் காரணம், சங்கரிதான். சம்மந்தனின் பெருந்தன்மையை ஏற்றுக்கொள்ளாமல், தமிழர்கள் மறந்துவிட்ட தனது தமிழ் தேசிய ஐக்கிய கூட்டணிக்கு ஐந்து ஆசனங்கள் ஒதுக்கவேண்டும் என்று சங்கரி பிடிவாதம் பிடித்ததினால்தான், அவரும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகாமல் போனார். இல்லையென்றால், யார் கண்டது, இன்று அவரும் அவரது கட்சியும்கூட தமிழர் அரசியலில் உரிய பங்கு ஆற்றியிருப்பார்கள் என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

இதில் ஒரு டைவர்ஷன் உண்டு. அன்றளவில், தமிழர்களின் அடையாளமான உதய சூரியன் சின்னத்தை சங்கரி தலைமைக்கு வழங்கி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தது. அதனை முன்வைத்து, சம்மந்தனோடு பேரம் பேசலாம் என்று சங்கரி கருதியதாலேயே, கிடைக்க இருந்ததும் கிடைக்காமல் போனது. இதுதானே உண்மை!

ஆறில் ஒரு வீதம்

இது சம்மந்தன் சம்மந்தப்பட்ட ஓநாய் கதை என்றால், வளர்த்த கிடா ஒப்பீடு நேரடியாக அவரை குறிப்பது அல்ல. மாறாக, அவரது செல்லப்பிள்ளை, அரசியல் வாரிசு என்றெல்லாம் பேசப்பட்ட சுமந்திரன் குறித்த விடயம். அண்மையில் பேட்டி ஒன்றில், தனது உடல்நிலையை கருத்தில் கொண்டு, சம்மந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகி, இளம் தலைமுறையினருக்கு வழிவிட்டிருக்கவேண்டும் என்ற சாரப்பட சுமந்திரன் கருத்து வெளியிட்டு இருந்தார்.

அதிலும், இது குறித்து தான் சம்மந்தனுக்கு முன்னரே கடிதம் எழுதி இருந்தார் எனவும் சுமந்திரன் தெரிவித்தார். அதாவது, அந்தக் கடிதத்திற்குச் சம்மந்தன் செவிசாய்க்காததால்தான், சுமந்திரன் இப்போது அதனை பொதுவெளியில் போட்டு உடைக்கிறார் என்ற எண்ணமும் இதன் மூலம் தோன்றியது.

முன்னரே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றாக இருந்த காலத்திலும் அவர்களில் பலரும் சேர்ந்து சம்மந்தனிடம் இதே கருத்தை தெரிவித்தனர் என்று செய்திகள் வெளியாயின. ஆனால், அவர்கள் கூறியது போல் இல்லாமல், தனது திரிகோணமலை மாவட்ட மக்களின் தேவைகளுக்கு நாடாளுமன்றத்தில் இன்னமும் குரல் எழுப்ப தன்னால் முடியும் என்று சம்மந்தன் அப்போது கூறினார் எனவும் செய்திகள் தெரிவித்தன,

ஆனால், உண்மை நிலவரம் என்ன? கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தொடங்கி தற்போதைய அவைக் கூட்டங்களில் ஆறில் ஒரு வீதம்கூட பிரசன்னமாகி, தனது கணீர் குரலில் பேசுவதற்கு சம்மந்தனால் இயலவில்லை. அதற்கு அவரது உடல் நிலை இடம்கொடுக்கவில்லை. கடந்த வருடம் ஜனாதிபதி ரணிலின் தேர்வின்போது, சம்மந்தனை சக்கர நாற்காலியில் அமர்த்தி இரண்டு மூன்று பேர் உதவியுடனேயே அவர் நாடாளுமன்றத்தில் வாக்களித்ததை நாடு முழுவதுமே நேரடியகத் தொலைகாட்சியில் காணமுடிந்தது.

சம்மந்தன் ராஜினாமா செய்யவேண்டும் என்ற சுமந்திரனின் கருத்துக் குறித்த தனது எண்ணத்தை பதிவு செய்த தமிழ் அரசு கட்சியின் மற்றொரு தலைவரான தவராசா, அதனை 'வளர்த்த கிடா மார்ப்பில் பாயும்' என்ற பழமொழியுடன் ஒப்பிட்டு பேசினார். இதுவும் சம்மந்தனை வைத்து அரசியல் செய்வதற்கே சமம். ஆனால், சம்மந்தன் பதவி விலகினால், கட்சிக்கும் மக்களுக்கும் அது நன்மைபயக்குமா, இல்லையா, என்பது குறித்து தவராசா கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

அது குறித்து அவர் ஏதோ ஒருவிதத்தில் கருத்துகூறியிருந்தால் மட்டுமே சுமந்திரன் குறித்த அவரது விமர்சனத்திற்கு சிறிதாவது விலை இருந்திருக்கும். சுமந்திரன் கூறிய பல கருத்துக்களை பலரும் ஏற்றுக்கொண்டது இல்லை. ஏன், அவர் தனது சுயநல அரசியலுக்காகவே அவ்வாறு பேசுகிறார், செயல்படுகிறார் என்றுகூறுவோரும் உள்ளனர். ஆனால் அவர்கள்கூட சம்மந்தன் பதவி விலகவேண்டும் என்ற சுமந்திரனின் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள்.

மகன் செத்தாலும்...

சம்மந்தனை பொறுத்த வரையில், போர் முடிந்த காலம் தொடங்கி, இனப்பிரச்சினைக்கான தீர்வு தன் காலத்திலேயே, தனது தலைமையின் கீழேயே காணப்படும் என்று திடமாக நம்பினார். அதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்தார். ஆனால், 'மகன் செத்தாலும்...' என துவங்கும் பழமொழிக்கேற்ப உள்வீட்டிலேயே அவருக்கு எதிராகச் சதிவலை பின்னப்பட்டதோ என்று கருத இடமிருக்கிறது. அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அரசுடன் அரசியல் தீர்வு குறித்த பேச்சு சரியான திசையில் சரியான வேகத்தில் முன்சென்றது. அதனை தற்போது அனைத்துதரப்பினருமே மறந்துவிட்டனர்.

அப்போது, அந்த முயற்சிக்கு ஆப்பு அடிக்கும் முகமாக, பேச்சு நடக்கும் போதே அதனை வெளி உலகிற்கு, குறிப்பாக புலம்பெயர்ந்தோர் அமைப்புகளுக்கு 'லீக்' செய்தவர்கள் உண்டு. தங்களது கைபேசியை பேச்சு நடக்கும் மேசையில் 'ஆன்' செய்து வைத்து அதனை வெளி உலகிற்கு ஒலிபரப்பு செய்த மேதாவிகள் இங்கே உண்டு.

அது போன்றே. தமிழ்ச் சமூக அமைப்புகள் சிலவற்றை உசுப்பிவிட்டு, அவர்களை கலந்தாலோசிக்காமல், கூட்டமைப்பு பிரதிநிதிகள் எந்த ஒரு அரசியல் தீர்வையும்

5ம் பக்கம் பார்க்க.....

காலைக்கதிர் Kalaikkathir

# இந்திய அரசு எப்போதுமே மலையக மக்களுடன் இருக்கும்

## நிர்மலா சீதா ராமன் உறுதி



இந்திய அரசாங்கம் எந்நேரமும் மலையக மக்களுடன்இருக்கும்எனஇந்தியநிதிஅமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவிக்கின்றார்.

நேற்று(வியாழக்கிழமை)சுகததாஸஉள்ளக அரங்கில்தற்போதுநடைபெற்றுவரும்'நாம்-20' நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மலையக மக்களுக்கான இந்திய அரசாங்கத்தின் 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் இன்றைய தினம் (நேற்று) ஆரம்பிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளதோடு கல்வித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(05)

# ஒநாயும் கடாவும்...........

அரசுடன் எட்டிவிடக்கூடாது என்று கரிசனையுடன் செயல்பட்டவர்கள் உண்டு. அவர்களுக்கு மறைந்த மன்னார் ஆயர், இராயப்பு ஜோசப் தலைமை வகித்தார்.

இரு தரப்பினரும் கலந்து பேசியபோது, சம்மந்தன் தரப்பு, அரசியல் தீர்வு விடயத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் சமூக அமைப்புகளை கலந்துகொண்டு மட்டுமே முடிவு எடுக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தது. என்றாலும், பிறருடைய அழுத்தமும் அன்று கூட்டமைப்பு சரியான தீர்வு திட்டத்தை நோக்கி நகர முடியததற்கு ஒரு முக்கிய காரணம்.

தவறான முன்னோடி

எது எப்படியோ, சம்மந்தன் தனது காலத்திலேயே கட்சிக்கும் மக்களுக்கும் அடுத்த தலைமுறை தலைமைகளை அடையாளம் காட்டி, அவர்களை பொறுப்பில் நிறுத்தி அழகு பார்க்கும் முக்கிய கடமையைச் செய்திருக்கவேண்டும். அவ்வாறு செய்யாதது, சம்மந்தன் காலம் கடத்தியதற்கு எந்த விதத்திலும் நியாயம் கற்பிக்க முடியாதது. பிற தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாக இருந்திருக்க வேண்டிய அவரே, தவறான முன்னோடியாக மாறிவிட்டார் என்பதே வருத்ததிற்குரிய உண்மை.

சம்மந்தனைப் பொறுத்தவரையில் நிதி காத்த பூதமாக தனது வாழ்க்கையை ஓட்டி விட்டார். ஆனால், அந்தப் புதையல் பானை காலி என்பதை அவரே உணர்ந்தார் போன்றும் தெரியவில்லை. அதாவது, அந்தப் புதையல் பானை முதலில் இருந்தே காலி என்பது அவருக்கும் தெரிந்த விடயம்தானே.

தான் இல்லாவிட்டால், தமிழர் அரசியலே இல்லாமல் ஆகிவிடும் என்ற சம்மந்தன் போன்றோரின் தவறான எண்ணவோட்டம் இன்று தமிழர் அரசியலுக்கு எதிர்காலமே இல்லாமல் செய்துவிட்டது, சம்மந்தன் செயலிழந்த நிலையில் அதுவே நிலைமை.

அவரது காலத்திற்கு பின்னரான தமிழ் சமூக-அரசியலின் அவல நிலைமையே சமகாலம் படம் பிடித்து சம்மந்தனுக்கே காட்டிக்கொண்டிருக்கிறது. அவரைப்போன்று, பதவியை விடாது பிடித்துக்கொண்டிருக்கும் பிறதமிழ்அரசியல்கட்சித்தலைவர்களுக்கும், தலைமைகளுக்கும் கூடத்தான்!

யில் சட்டத்திற்கு புறம்பாக மீன்பிடிப்பதை தடுப்பதற்காக, அவர்களுக்கான தண்டனை மற்றும் அபராத தொகையை கட்டுக் கடங்காமல் அதிகரிக்கும் விதத்தில் பாராளு மன்றத்தில் தனி நபர் சட்ட முன்மாதிரியை முன் வைத்தார். இது இந்தியாவில், தமிழ் நாடு மீனவர்களையே குறிவைத்தது என்பதே அப்பட்டமான உண்மை.

என்றாலும், அந்த சட்ட முன்வடிவு தனி நபர் முயற்சி மட்டும்தான். காரணம், சுமந்திரனின் பிரேரணைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் இருந்து யாரும் ஆதரவு தெரிவித்ததாக தெரியவில்லை. ஏன், அன்றும் இன்றும் இந்திய மீனவர்களை குறைகூறும்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா கூட வாளவிருத்தார்.

சுமந்திரனுக்கு அப்போது ஆதரவு கொடுத்த ஒரே நபர், அன்றைய பிரதமர், இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே மட்டும்தான். அவர்தான், சுமந்திரனின் பெயரில் இருந்த தனி நபர் சட்ட முன்ஸமாதிரியை மாற்றி எழுதி, அரசு சார்பில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதுவே ஒருமனதாக சட்டமானது.

அந்த வகையில், இன்றைய ஜனாதிபதியால் முன்னெடுக்கப்பட்ட சட்டத்தை முன்வைத்துக்கொண்டு. இங்குள்ள தமிழ் எம்.பிக்கள், இந்தியாவில் எப்படி முகம் கொடுத்து பேசமுடியும்? அதிலும் குறிப்பாக அவர்களுள் ஒருவரான சுமந்திரன் முன்வைத்த சட்ட வடிவம் என்கிறபோது, அதன் எதிரொலி என்னவாக இருக்கும்?

எது எப்படியோ, இந்தியாவில், குறிப் பாக தமிழ் நாட்டில், பிரச்சினையின் நெளிவு-சுளிவுகளை முழுவதுமாக உணர்ந்து கொண்டுள்ள அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும், இரு நாட்டு மீனவர் பிரச்சினையை தங்களால் குழப்ப முடியுமே தவிர, அதற்கான தீர்வை கொடுக்க முடியாது என்ற எண்ணவோட்டத்தில் இருக்கிறார்கள. அதனாலேயே, அதனை இரு நாட்டு மீனவர்களும் அரசுகளும் மட்டுமே கையாண்டு, தீர்வை நோக்கி நகர முடியும் என்றும் கருதுகிறார்கள்.

இப்போது போய், அங்கு குட்டையை குழப்ப வேண்டுமா? அல்லது கலங்கிய நீரில் மீன் பிடிக்க தான் வேண்டுமா?


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens

Victoria Park, Kande Ela Educational Forest Park

Lunugamvehera National Park, Yala National Park

Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1160/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swshpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# சக்தி வழிபாடு





சிவன் இல்லை என்றால் சக்தி இல்லை என்பதை நாமறிவோம் அதே நேரம் சக்தி இல்லாவிட்டால் சிவன் தொழிற்படாது என்பது உண்மை. இறைவன் இச்சக்தியினால் உயிர்களுக்கு அருள் புரிய விரும்புகின்றான். சக்தி என்றால் என்ன? சக்திக்கும் சிவத்திற்கும் இடையே என்ன தொடர்பு என்பதை விளக்குவதே இந்து மதம் இவ்வுலகம் யாவும் சக்தி மயமானது.சக்தி பல்வேறு தொழில்களை ஆற்றவும் தத்தவங்களை விளக்கவும் பல்வேறு வடிவங்கள் எடுக்கிறாள்

முத்தொழில்களை ஆற்றும் போது பிரம்மானிஇ வைஸ்ணவிஇ உருத்திராணி எனப்பெயர் பெறுகின்றாள்.சிவனிற்கு ஒப்படும் போது துர்க்கையாகவும் தீமையை அழிக்கும் போது காளியுமாகிறாள். வித்தைஇ கல்வி என வடிவமெடுக்கும் போது சரஸ்வதியாகவும் தனதானிய செல்வமென வடிவமெடுக்கும் இலக்குமி எனவும் அழைக்கப்பெறுகின்றாள்;

அவதார புருசர்களாக சித்தர்களாக தோன்றியோர் கூட சக்தியை வழிபட்டு

வந்தனர். இராமன் இலங்கை செல்ல முன் துர்க்கை பூசை செய்ததாகவும் கண்ணன்

காத்தாயினி பூஜை செய்ததாகவும் சங்கராச்சியார் சாரதா பூஜை செய்ததாகவும் இராம கிரு

ஸ்ணர்காளியைவழிபட்டதாகவும்நாமறிந்தசெய்தியாகும். ஜகதாம்பா உணவழிக்கும் அன்ன

பூரணி அனைத்துக்கும் மேலான இராஜேஸ்வரிஇ மகா சக்தி பேராற்றல் மிக்கவள் என பல்வேறு பெயர்களால் சக்தி போற்றப்படுகிறாள்

சக்தியை நோக்கி பல்வேறு விரதங்கள் அனுஸ்டிக்கப்படுகின்றன. அவற்றுள் கல்வி செல்வம் வீரம் அருள் வேண்டி நவராத்திரி விரதம் எம்மால் பயபக்தியுடன் அனுஸ்டிக்கப்படுகின்றது. சிவனுக்கு சமமான நிலையில் சக்தி அமையும் போது அது பராசக்தி எனப்படுகின்றது. பிற சமயங்களின் செல்வாக்கினாலும் சக்திக்கு தனி உரிமை கொடுக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டாலும் புராணங்களின் செல்வாக்கினாலும் சாக்தம் என்ற சைவ மதப்பிரிவு உருவாகியது.

பெண்ணிற்கு முதன்மை இடம் வழங்கும் சைவ மதப்பிரிவே சாக்தம் ஆகும் அம்பாள் வழிபாட்டில் மிக முக்கியமானது கோடுகளாலான யந்திர வழிபாடாகும். சக்தி வழிபாட்டில் இதனை சிறீசக்கர பூசை என்பார்.கரப்பா மற்றும் குப்தர் காலங்களிற்கிடையில் சக்தி வழிபாடு கருத்தூன்றி இருந்ததே வர சிறப்பான வளர்ச்சி பெறவில்லை. சக்தி என்று கருத்து மக்களிடையே கருத்தூன்றி இருந்தது. இதற்கு ஆதரிக்குமாற் போல் இருக்கு வேதம் துணைநிற்கின்றது.

சக்தியைஇயக்குசக்திஇஇயங்குசக்திஎனவகைப்படுத்தலாம். இயக்கு சக்தியை உடைய தெய்வம் சூரியன் ஆகும். சூரியனின் தாயாக உஸையும் துணையாக அக்கினியும் காணப்படுகின்றது.

வேத காலத்திலிருந்தே சக்தி வழிபாடு இடம்பெற்று வந்தது. இந்நிலையில் தான் ஆகமங்கள் தோன்றின. ஆகமங்கள் உருவம் அமைத்து வழிபாடு செய்வதை ஊக்குவித்தன. உருவம் அமைக்கும் போது சக்திக்கான இடப்பக்கத்தை வரையறுக்க தவறவில்லை. அர்த்தநாதீஸ்வரர் வடிவம் சக்திக்கு சமபங்கம் கொடுத்ததை முன்வைக்கின்றது. கேதார கௌரி விரதம் அனுஸ்டித்து சக்தி சிவனுடன் இணைந்திருக்கும் பேற்றை பெற்றாள். சிவனிற்கு 27 ஆகமங்கள் உண்டு.அவை சக்தியால் அருளப்பட்டதாக கருதப்படுகின்றது.

பராசக்தியாக அம்மன் அறக்கருணை மூலமும் மறக்கருணை மூலமும் அருள் செய்ய வல்லவள்.அதாவது அன்பின் மூலமும் தண்டித்தல் மூலமும் அருள் செய்வாள்.இனி நாம் சக்தியின் அவதாரங்களை நோக்கினால் மாரியம்மன்இகௌரி மனோன்மணிஇகாளிஇ திரௌபதிஇகண்ணகிஇமகமாரி எனப்பல்வேறு அவதாரங்கள் சக்திக்குண்டு. சிவன் இபிரம்மாஇவிஸ்னு ஆகிய மூவரின் பேரொலியிலிருந்து தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன மார்க்கண்டேயர் புராணம்இதிருமந்திரம்இஅபிராமி அந்தாதி ஆகியன சக்தியை போற்றி பாடப்படுகின்றன.சக்தியை வழிபட்டு மேன்மையடைந்தோர் பல. ஆகவே நாமும் சக்தியைப்போற்றி மேன்மை அடைவோமாக.

**மோ.அஸ்வினி**
**9A**
**யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.**

# பாடல் பெற்ற ஈழத்து திருத்தலங்கள்



ஈழநாட்டின் வரலாற்றுப் புகழ் மிக்க வழிபாட்டுத் தலங்கள் பலவும் காணப்படுகின்றன. அவற்றுள் முருக வழிபாட்டுத் தலங்களாக நல்லூர் கந்தசுவாமி கோயிலும், அம்மன் வழிபாட்டுத் தலமாக நயினை நாகபூஷனி கோயிலும், சிவன் வழிபாட்டுத் தலமாக திருக்கேதீஸ்வரமும் அமைந்தமை வழிபாட்டிற்கு உரிய கோயிலாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் திகழ்ந்தது. கோட்டை இராச்சியத்தை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகுவின் மகனாகிய செண்பகப் பெருமாள் யாழ்ப்பாண இராச்சியத்ததைக் கைப்பற்றி நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். ஆம்மன்னனுடைய காலத்திலேயே நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டப்பட்டது.

மன்னர்களால் போற்றப்பட்டுவந்த மூலவிக்கிரகத்துக்குப் பதிலான வேல் ஒன்றினை மூல மூர்த்தியாகக் கொண்டு அந்த ஆலயம் கட்டியெழுப்பப்பட்டது. இவ்வாயலம் கிழக்கு, தெற்கு, வடக்கு திசைகளில் கோபுர வாசல்களைக் கொண்டுள்ளது. ஆலயத்தினுள்ளே தென்புறத்தில் தீர்த்தக்கேணி அழகுற அமைந்துள்ளது. இவ்வாலயத்தின்மேல் புலவர்கள் பலர் பிரபந்தங்கள் பாடியுள்ளனர். இவ்வாலயத்தில் நித்திய நைமித்திய பூசைகள் காலந்தவறாது நடைபெறுகின்றமை சிறப்பம்சமாகும். இங்கு, ஆவணி அமாவாசையைத் தீர்த்த தனமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்மேற்காக உள்ள தீவுகளுள் ஒன்றே நயினாதீவு. இதை நாகதீபம், மணிபல்லவம், மணித்தீவு, பிராமணத்தீவு என்றும் குறிப்பிடுவர். இத்தீவிலேயே நாகபூஷணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற் குடிகொண்டிருக்கும் இறைவியை நாகபூஷணி, நாகம்மாள், நாகேஸ்வரி எனப் பல நாமங்களால் போற்றுவர். அறுபத்துநான்குசக்திபீடங்களுள்நயினைநாகபூஷணிஅம்மன் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தில் ஐந்துதலை நாகபடக் குடையின் கீழ் அம்பாள் வீற்றிருக்கின்றாள். இம்மூர்த்தம் மிகப்பழமையானது. இவ்வாலயத்தின் தலவிருட்சம் வன்னி மரமாகும். இதன் தீர்த்தமான சித்தாமிர்த புட்கரணி ஆலயத்தின் மேற்கில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய பூசைகள் கிரமமாக நடைபெறுகின்றன. ஆனிப் பூரணையை தீர்த்த நாளாகக் கொண்டு மகோற்சவம் பதினைந்து நாட்கள் நடைபெறுகின்றன. நாட்டின் பல்வேறு இடங்களிலுமிருந்து அடியார்கள் இவ்விழாக்களின் பொழுது அம்பாளைத் தரிசிப்பதற்காக வருகை தருவர்.

ஆனிமாதப் பூணை நிலவொளியில் அலைகடல் மத்தியில் அம்பாள் தெப்பத்தில் எழுந்தருளிக் காட்சி சொடுப்பது அடியார்களின் மனதை விட்டு நீங்காத அற்புதக் காட்சியாகும். இந்த ஆலயத்தைச் சார்ந்ததாக 'அமுத சுரபி' என்ற பெயரிலான அன்னதான மடம் ஒன்று அமைந்துள்ளது. அம்மடத்தில் விசேட தினங்களில் அன்னதானம் வழங்கப் பெறுகின்றது. கோயில் மடத்தில் நித்தம் அன்னதானம் வழங்கப்படுகின்றமை சிறப்பான அம்சமாகும். நாகபூஷணி அம்மன் ஆலயம் சமூகப் பணிகள் பலவற்றை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தேவாரப்பாடல் பெற்ற தலங்கள் என்ற சிறப்புக்குரியவை திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய இரண்டும் ஆகும். பண்டைக்காலம் தொட்டுச் சிறப்புற்று விளங்கிய இத்திருத்தலத்தின் மீது, சம்மந்தரும், சுந்தரரும் இந்தியாவில் இருந்தபடியே தேவாரப்பதிகங்கள் பாடியுள்ளனர். இவ்வாலயச் சூழலில் பல மடங்கள் அமையப்பெற்றுள்ளன. திருஞானசம்மந்தர் மடம், திருவாசக மடம், நாவலர் மடம், சிவராத்திரி மடம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மடம் முதலானவை அடியார் பணியை முன்னெடுத்துச் செல்கின்றன.

**விஜயகுமார் தீபிகா,**
**யாழ். நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்**

காலைக்கதிர் Kalaikkathir

## கடினமாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரினதும் எதிர்காலம் கேள்விக்குரியாகிவிடும். அதனால் சரியான தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டியதுஅவசியமாகும்.

மக்களின் விமர்சனங்களுக்கு மத்தியிலாவது நாட்டிற்கான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதேபோல் சரிவடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் பொறுப்பை நானும், அமைச்சரவையும் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

தொடர்ச்சியாக நாம் யாசகம் பெறும் நாடாக இருக்க முடியாது. நாம் எமது வலுவுடன் முன்னோக்கிச் செல்லவேண்டும். கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விருப்பமில்லாமல் சில தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. பலர் விமர்சித்தாலும்அதனைசெய்திருக்காவிட்டால் நாடுமீண்டும்கடந்தவருடத்திலிருந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்.

இவ்வருடத்தில் 10.7 ஆக எமது பொருளாதார வளர்ச்சி காணப்படுகின்றது. இன்றளவில் நூற்றுக்கு 10 5 ஆக காணப்படுகின்றது. அதனால் நாம் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்வதா பின்னோக்கி நகர்வதா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

மக்களுக்கு உண்மையை கூறி நாட்டுக்கான தீர்மானங்களை மேற்கொள்வதே தலைமைத்துவப் பண்பாகும்.மேற்படிதீர்மானத்தினால் சிறு தொகையை ஈட்டிக்கொண்டு அதனைக் கொண்டு சிறு மற்றும் மத்திய தர கைத்தொழில் முயற்சியாளர்களுக்குவங்கிக்கடன் சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம். இல்லாவிட்டால் மேற்படிதொழிற்சாலைகள்சரிவைச் சந்திக்கும்.

தொழில் முயற்சியாளர்கள் என்ற வகையில் நீங்களும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். அதனால் மக்களின் விமர்சனங்களுக்கு மத்தியிலாவது நாட்டுக்கான தீர்மானங்கள் தொடர்பில்நாம்சிந்திக்கவேண்டும்.

எவ்வாறாயினும் நாட்டை முன்னேற்றும் தீர்மானத்துடன் முன்னோக்கிச்செல்வோம். அதனால் யாசகம் பெறும் நாட்டுக்கு மாறான சிறந்த நாடொன்றை கட்டியெழுப்ப முடியும். இந்நாட்டுக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென நான் கருதுகிறேன். உலகவங்கிஉள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுக்களை முன்னெடுக்கிறோம். தற்போதுநெருக்கடியாகஇருந்தாலும் இன்னும் இரண்டு, மூன்று வருடங்களில் சுமூகமாக நிலைமை உருவாகும்.

2024ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்திக்கொண்டுமுன்னோக்கிச் செல்வதே எமது எதிர்பார்ப்பாகும். அனைவருக்கும் வாழ்த்துக்கள் என்றார்.

## எமது அரசியலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவை சட்டவிரோதமான முறையில் ஈட்டியமை உள்ளிட்ட 11 குற்றச்சாட்டுகளில் இருந்து நாமல் ராஜபக்ஸ உள்ளிட்ட 5 பிரதிவாதிகளும்குறித்தநிறுவனமும் எவ்விதசாட்சிவிசாரணைகளுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். அத்துடன், குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கான ஆதாரங்கள் பேதுமான அளவில் இல்லாத காரணத்தாலேயே வழக்குத் தள்ளப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நாமல் தெரிவித்ததாவது:

கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் நீதித்துறையின் மீது வைத்தீருந்த நம்பிக்கை இன்று உறுதியாகியுள்ளது. இதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் என்னையும் சில பெண் நண்பர்களையும் கைது செய்து தடுத்து வைத்தார்கள். எம் மீது வழக்குத் தொடுத்தார்கள். குறிப்பாக எமது அரசியல் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பலர் முயன்றார்கள். ஆனால் அத்தனை சவல்களையும் நாம் முறியடித்து வெளியேறியுள்ளோம் என்றார்.

## பல்கைலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களினால் நாட்டு மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.புதிய வரி கொள்கையினால் நிறைவடைந்த 10 மாத காலத்துக்குள் மாத்திரம் ஆயிரத்துக்கும் அதிகமான விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

அரச பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் உள்ளவர்களும் நாட்டை விட்டு வெளியேறுவதால் பல்கலைக்கழக கல்விக் கட்டமைப்பு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் பல்கலைக் கழகங்களுக்கு ஒதுக்கப்படும் மானியங்கள் கட்டம் கட்டமாக வரையறுக்கப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டுக்குப் பல்கலைகழகங்களுக்கு அதிகளவில் மாணவர்களை இணைத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. வளப்பற்றாக்குறை காணப்படும் நிலையில் அதிகளவில் மாணவர்களை பல்கலைகழகங்களுக்கு உள்வாங்கினால் பெரும்நெருக்கடிகளைஎதிர்கொள்ள நேரிடும்.

பல்கலைக்கழகங்களில் நிலவும் இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்குதீர்வுகாணுமாறு ஜனாதிபதியிடம் இடம்பெற்ற பேச்சுக்களில் எடுத்துரைத்தோம். ஆனால் இதுவரை சாதகமான தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே, பல்கலைக்கழக கட்ட மைப்பை முழுமையாக இல்லாதொழிக்கக்கூடாது என்பதற்காகவே விரிவுரையாளர்கள் நிலையான தீர்வு கோரி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு உறுதியான தீர்வு கிடைக்காவின் எதிர்வரும் நாட்களில் கடுமையான தீர்மானங்களைஎடுப்போம்என்றார்.

## பொருளாதார,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தப்பட்ட ஈரிசிஏ (சிவீஎீபு) தொடர்பான பேச்சை மீண்டும் தொடங்க , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 29 ஜீலை 2023 அன்றுஇந்தியாவிற்குமேற்கொண்ட பயணத்தின் போது, இரு நாட்டுத் தலைவர்களும்ஒப்புக்கொண்டனர்.

அதன்படி, வர்த்தகத் திணைக்களத்தின் இணைச் செயலாளர் ஆனந்த் ஸ்வரூப் தலைமையிலான 19 இந்திய அதிகாரிகள் குழு இலங்கை வந்து இந்த விரிவான ஒப்பந்தம் குறித்து விரிவாகக் கலந்துரையாடியது.

வெளிவிவகார அமைச்சு, வர்த்தகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு, கைத்தொழில் அமைச்சு, வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம், வர்த்தகத்திணைக்களம், விவசாயத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி மற்றும் முதலீட்டுச் சபை, ஜனாதிபதி செயலகத்தின் பிரதான பேச்சுவார்த்தையாளர் கே.ஜே. வீரசிங்க தலைமையிலான தேசிய வர்த்தகக்குழுதலைமையில்பேச்சு நடத்தப்பட்டன.

பண்டங்கள், சேவைகள், ஆரம்ப கட்ட விதிகள், வர்த்தக தீர்வுகள், சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிகள், வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள், சுகாதாரம் மற்றும் தாவர சுகாதாரநடவடிக்கைகள், சட்டமற்றும் நிறுவன விடயங்கள் ஆகியவை குறித்து இந்தக் கலந்துரையாடலில் உள்ளடக்கப்பட்டன. அத்துடன், இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதுதொடர்பான விடயங்கள்குறித்துகலந்துரையாடும் விசேடஅமர்வுஒன்றுஇடம்பெற்றது.

# கிராம உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்புப் பரீட்சை டிசெம்பரில்

கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குள் நியமனங்கள் பூர்த்தி செய்யப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சுமார் 3000 கிராம அலுவலர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளனஎனப்பிரதமர்தெரிவித்தார். மேலும் ,சட்டரீதியாக அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தேர்வில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.வவுனியா மாவட்ட உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் வவுனியா மாவட்ட செயலகத்தில் 'புதிய கிராமம் ' புதிய நாடு' தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள்உள்ளதொலைதூர பிரதேசங்களில் விசேட தகைமையின் அடிப்படையில் பரீட்சையை நடாத்திய பின்னர் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.(05)

# யாழில் கசிப்புடன் இளம்பெண் கைது

யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் இளம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் கசிப்பு வியாபாரம் நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டுக்கு சென்று சோதனை நடாத்திய போது 5 லீற்றர் கசிப்பை பொலிஸார் மீட்டனர்.

அதனை அடுத்து கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் வீட்டில் இருந்த 27 வயதான பெண்ணைக் கைது செய்தனர். (05)

# இலங்கை இளநீருக்கு அதிகரிக்கின்ற மவுசு



இலங்கை இளநீருக்கு வெளிநாட்டு சந்தையில் கேள்வி துரிதமாக அதிகரித்துள்ளதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ் வருடம் இளநீர் ஏற்றுமதி 117 வீதத்தால் அதிகரித்துள்ளதாக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தரவுகள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பான கலந்துரையாடல் தென்னைஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுடன் அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போதே இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையின் தென்னைச் செய்கையின் அபிவிருத்திக்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும்இதுவரையில்ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

2022 ஆம் ஆண்டு 11 மில்லியன் இளநீர் ஏற்றுமதி செய்யப்பட்டு 110 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள இளநீரின் தொகை 14 மில்லியன் எனவும் இதன் மூலம் கிடைத்த வருமானம் 140 மில்லியன் ரூபா எனவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (05)

# நாட்டுத் துப்பாக்கி, வாளுடன் இராணுவச் சிப்பாய் கைது

12 தோட்டாக்களுடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் வாளுடன் இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அகலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அகலியா பிரதேசத்தில் புவக்கஸ்துவத்தை பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஹொரண இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் ஒருவர் ஆவார்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் குறித்த சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்ட போது இந்த ஆயுதங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் புதன்கிழமை பத்தேகம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். (05)

# திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ளம், வறட்சி உள்ளிட்ட காரணங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) திருகோணமலைமாவட்டசெயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிதாக விவசாய ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகளுக்கான பற்றுச்சீட்டு வழங்கும்நிகழ்வும்இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 736 விவசாயிகளுக்கான 22.5 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 47 விவசாயிகளுக்கான காசோலை நேற்று வழங்கப்பட்டதுடன் மீதமாகவுள்ளவிவசாயிகளின்நட்ட ஈட்டு கொடுப்பனவு அவர்களின் வங்கி கணக்கின் வரவில் வைப்பில் இடப்பட்டுள்ளது என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிசபைஉதவிபணிப்பாளர் கே.எல்.அன்சார் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், கமத்தொழில் மற்றும்கமநலகாப்புறுதிசபையின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# யாழில் இளைஞனின் உயிரை பறித்த ஐஸ்!

ஐஸ் போதைப் பொருள் பாவனையால் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் யாழ்.நெடுந்தீவில்பதிவாகியுள்ளது.

நெடுந்தீவு மேற்கை சேர்ந்த குறித்த இளைஞன் வெளியூரில் வசிக்கும் தனது உறவினரின் வீட்டை பராமரித்து வந்துள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை குறித்த வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் 'ஐஸ் போதை பொருளை அளவுக்கு அதிகமாக நுகர்ந்தமையால் உயர் குருதி அழுத்தம் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது.(05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# சம்பந்தன் குறித்து பெரிதாக அலட்டத் தேவையில்லையாம்

## அமைச்சர் டக்ளஸ் 'அற்வைஸ்'


நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் பதவி நீக்க விவகாரம் தொடர்பாக

பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரித்துள்ளார்.

இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்ற கருத்து தொடர்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்

தமிழரசுக் கட்சியின் விவகாரத்தை அந்தக் கட்சி சார்ந்தவர்களே தீர்மானிக்க வேண்டும். மேலும், குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக வைத்திருக்கும் மனோநிலையைக் கைவிட்டு, மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உளப்பூர்வமான செயற்பாட்டை வெளிப்படுத்த முன்வராத வரையில், அவ்வாறான கட்சிகளுக்கு தலைவராக யார் செயற்பட்டாலும், ஏமாற்றத்தைத் தவிர வேறு எதுவும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

ஏனெனில், எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுத் தருகின்றவர்களாக அரசியல் பிரதிநிகள் இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்மந்தன், மூப்புக் காரணமாக பதவி விலக வேண்டும் என்ற கருத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பொதுவெளியில் வெளியிட்டமை பேசுபொருளாக மாறியுள்ள போதிலும், குறித்த கட்சியை சேர்ந்த பெரும்பாலானவர்களின் நிலைப்பாடும் சுமந்திரன் எம்.பியின் கருத்தை ஒத்ததாகவே இருப்பதாக கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர்


யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களால்

வேலைநிறுத்தப் போராட்டமொன்று நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே நேற்று பி.ப பல்கலைக்கழக முன்றிலில் குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.(05)

# மதுவினால் ஒரு நாளில் 40 பேர் அகால இறப்பு

மதுபான பாவனையால் இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 40 பேர் அகால மரணமடைகின்றனர் என மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

மது அருந்துவதால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 15 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

மதுவின் வருமானத்தை விட மதுவால் நாட்டுக்கு ஏற்படும் பொருளாதார சேதம் அதிகம் என ஆய்வுகள் கூறுகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டு மதுவின் வருமானம் 10,5,234 மில்லியன் ரூபாவாக இருந்த போது அதில் மதுவால் அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார சேதம் ஆண்டுக்கு 119660 மில்லியன் ரூபா ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையத்தின் படி, மது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக உள்ளது மற்றும் 17 நிலையான வளர்ச்சி இலக்குகளில் 14 இலக்குகளுக்கு மதுபானம் தடையாக செயற்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த வகையான மதுபானமும் மனித உடலுக்கு நல்லதல்ல என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், மதுபானம் புற்றுநோய், சிரோசிஸ், சிறுநீரகம் மற்றும் இதய நோய்கள் போன்ற பல நோய்களை நேரடியாக பாதிக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாலை விபத்துகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், குழந்தைகள் துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு மதுபானம் முக்கிய காரணமாகிவிட்டதாக குறித்த மையம் கூறியுள்ளது.(05)


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2023இல் வெளியிடப்பெற்றது.